1996 பிப்ரவரி 28]

போட்டோ பிலிம்ஸ் என்ற கம்பெனியால் எந்த இழப்பும் இல்லை என்று சொன்னார்கள். சமீபத்திலே அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இதே இந்துஸ்தான் கம்பெனியின் சரக்குகள் பல ஆண்டுகளாக அதை துறைமுகத்திலிருந்தே வெளியே கொண்டு வராமல் இருந்து அதை எரித்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி எரித்துவிட்ட சரக்குகள் என்பதில் அது உண்மையாக அதை வெளியிலே மத்திய அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்தி தமிழ்நாட்டுக்கு உள்ளே கொண்டு வந்து பேக்டரியிலே தரமான உற்பத்தியை உண்டாக்கி அதை செய்திருப்பார்களேயானால் அந்த வரி இழப்பு ஏற்படாமல் இருந்திருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு நமது தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதற்கான அமைச்சரின் பதிலை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் எரித்தது இவருக்கு எப்படித் தெரியும் ? பில் போட்டு விற்றிருப்பார்களேயானால் அதற்கு வரி போடுவதுதான் அமைச்சருக்குத் தெரியும். இதெல்லாம் அவர்கள் துறையைச் சார்ந்தது. அடுத்த முறை நாடாளுமன்றத்திற்குச் சென்று அங்கு போய் இதெல்லாம் கேளுங்கள். தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுப்பினால் அவர் கண்டிப்பாகப் போவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போய்விடுவாரா ? பரவாயில்லை. அந்த நம்பிக்கை உங்களுக்கு வந்துவிட்டது. நேற்று நாவலர் அவர்கள் சொல்லும்போது இருந்த நம்பிக்கையோடு இந்த நம்பிக்கையும் கூடுதலாக வந்துவிட்டது.

வினா என் 154, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

154—

திரைப்படங்களுக்கு வரி விலக்கு

*** 48761—**திருமதி கவிநிலவு தர்மராஜ் :*

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளித்து ஊக்குவிக்க அரசு முன்வருமா ?

[1996 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திரைப்படங்களை குறைந்த செலவிலே எடுப்பவர்களுக்கு நம்முடைய தமிழக அரசு சார்பிலே வரிவிலக்கு அளிக்கப்படுமா என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்ற பதிலைச் சுருக்கமாக கூறிவிட்டார்கள். திரைப்படங்கள் மக்கள் மனதிலே நல்ல கருத்துக்களை நேரடியாக விரைவிலே பதிய வைக்கக்கூடிய ஒரு சாதனமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூட அவருடைய பொன்னான ஆட்சியிலே பெண்களை பெருமைப்படுத்தக் கூடிய திரைப்படங்களுக்கு பரிசுகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என்ற ஆணையும் இட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் ஒரு திரைப்படம் எடுக்க வேண்டுமென்று சொன்னால் நல்ல கருத்துக்களை கொண்ட திரைப்படம் மைய கருத்துக்களை பெண்மையை பெருமைப்படுத்தக்கூடிய கருத்துக்களைக் கொண்ட திரைப்படங்களை எடுக்க வேண்டும் என்று சொன்னால் பல கோடி ரூபாய் செலவாகும் என்ற அடிப்படையிலே ஒரு எண்ணம் நிலவிக் கொண்டு வருவதால் நல்ல தரமான படங்களைத் தருவதற்கு சில படத் தயாரிப்பாளர்களால் இயலவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல கருத்துக்களை மையமாகக் கொண்டிருக்கின்ற திரைப்படங்களை குறைந்த செலவிலே எடுப்பார்களேயானால் அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தக்கூடிய அளவிலே நம்முடைய அரசு வரி விலக்கு அளிக்குமேயானால் அப்படிப்பட்ட தரமான படங்கள் இந்தத் தமிழகத்திலே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தை மீண்டும் பரிசீலிப்பாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படங்களின் மூலம் நல்ல கருத்துக்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்பதற்காக வரி விலக்கு ஒன்றை அளித்துத்தான் ஊக்குவிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. திரைப்படத் துறை செழிப்போடு இருக்க வேண்டும், திரைப்படத்துறை ஆக்கப்பூர்வமாக மக்களுக்கு நல்ல செய்திகளைச் சொல்ல வேண்டும் என்பதில் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிக்க அக்கறையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் ஆண்டுதோறும் குறைந்த முதலீட்டில் சிறந்த படங்களை

1996 பிப்ரவரி 28]

எடுக்கக் கூடியவர்களுக்கு 75 திரைப்படங்களை தேர்வு செய்து ஒரு திரைப்படத் தயாரிப்புக்கு 3 இலட்சம் ரூபாய் பரிசாக ஊக்கத் தொகையாக புரட்சித் தலைவி அவர்கள் அளித்து திரைப்படத் துறையை ஊக்கப்படுத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல திரைப்படங்களை எடுப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை நாட்டு மக்கள் அத்தனைபேரும் அறிந்து இருக்கிறார்கள். நான் தங்களிடம் வைத்திருக்கிற வினா தரமான படங்களை குறைந்த செலவிலே எடுப்பதை ஊக்குவிப்பதற்கு சுத்தமாக வரியே இல்லை என்று சொல்லி வரி விலக்கு அளிப்பார்களானால் இப்போது 28% வரியை அவர்கள் அதாவது காம்ப்பவுண்ட் வரியைச் சேர்த்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வரி விலக்கு கிடைக்குமேயானால் மீண்டும் குறைந்த செலவிலே நல்ல படங்களை எடுப்பதற்கு பெரிய பெரிய படத் தயாரிப்பாளர்கள் முன்வரவில்லை என்று சொன்னாலும் ஆக்கப்பூர்வமான படத் தயாரிப்பாளர்கள் இந்த வரி விலக்கு நோக்கத்தை அடிப்படையாக வைத்து நல்ல கருத்துக்கள், கதைகள் அவர்களிடம் இருக்கின்ற காரணத்தினால் அதை எடுப்பதன் மூலம் தமிழக மக்களுக்கு நல்ல பல கருத்துக்களைச் சொல்வதற்கு இது ஒரு சாதனமாக அமையும். எனவே மீண்டும் அமைச்சர் அவர்கள் இதை பரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லும்போதே குறைந்த முதலீட்டில் சிறந்த படத்திற்குத்தான் 75 படங்களைத் தேர்வு செய்து தலா 3 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக புரட்சித் தலைவி அவர்கள் வழங்குகிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். மிகுந்த கோடிக்கணக்கான செலவில் பிரம்மாண்டமான தயாரிப்பாளர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்குவதில்லை. பொதுவாக ஒரு துறை சிறப்பாக செயல்பட வேண்டும், அந்தத் துறையில் உள்ளவர்கள் வளமோடு இருக்க வேண்டும், அதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற வகையில் அரசு சிந்திக்குமே தவிர அரசாங்கத்தினுடைய வருவாயை எந்த வகையில் இழக்க வேண்டும் என்ற வகையில் அரசு சிந்திக்காது. ஆகவே வரி விலக்கு அளிப்பதற்கு எண்ணமே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 155, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.